**செய்தி வெளியீடு எண்: 150** **நாள்: 22.02.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (22.2.2019) தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017" மற்றும் அதற்கான விதிகள் இன்றுமுதல் அறிவிக்கை செய்யப்பட்டு, அமல்படுத்தப்படுவதை தொடர்ந்து, இச்சட்டத்தினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தவும், பொதுமக்கள் எளிதாக பின்பற்றுவதற்காகவும் உருவாக்கப்பட்ட www.tenancy.tn.gov.in என்ற வலைதளத்தை துவக்கி வைத்தார்கள்.

இந்த வலைதளத்தில், சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் விண்ணப்பங்களை இ–சேவை மையம் மூலம் பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்ட நிலையில், வாடகை அதிகார அமைப்பின் மூலம் வாடகை ஒப்பந்த பதிவு எண் (Tenancy Registration No.) வழங்கப்படும். இதன் மூலம் சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களிடையே ஏற்படும் பிரச்சனைகளை போக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960, வாடகைக் குடியிருப்பு வசதிகள் குறைவாகவும், வீட்டுமனை வணிகம் வளர்ச்சியடையாமலும் மற்றும் சொத்துக்கள் ஒரு சிலரிடமே இருந்த காலகட்டத்தில் உருவாக்கப்பட்டதாகும். வீட்டுமனை வணிகம் அதிக வளர்ச்சி அடைந்திருப்பதாலும் தனியார் வாடகை வீடுகள் தற்போது அதிகமாக பெருகிவிட்டதாலும், நடைமுறையில் இருக்கும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் காலத்திற்கு ஏற்றதாக இல்லை. மத்திய அரசு அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டபோது (MoU), வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தினை (Rent Control Act) நீக்க வேண்டும் என மத்திய அரசு பரிந்துரைத்தது. அதன்படி, மத்திய அரசால் சுற்றனுப்பப்பட்ட மாதிரி குடிவாரச் சட்டத்தினை ஏற்று, முந்தைய வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நீக்கும் வகையில், சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017 என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

வாடகைதாரர் மற்றும் உரிமையாளர் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி வாடகையை முறைப்படுத்துவதும், வாடகைதாரர் மற்றும் உரிமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை சமன் செய்வதும், இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு இச்சட்டத்தின் கீழ் வருவாய் கோட்ட அளவில், வாடகை அதிகார அமைப்பு ஏற்படுத்தி அதனை செயல்படுத்த துணை ஆட்சியர் அந்தஸ்த்திற்கு குறையாத அலுவலர் அரசின் முன் அனுமதி பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்படுவார்.

இப்புதிய சட்டத்தின்படி, ஒருமித்த கருத்தின் மூலமே அனைத்து வாடகை ஒப்பந்தங்களையும் ஏற்படுத்த முடியும். வாடகை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாடகை விதிக்கப்படும். குத்தகை விடுபவர் 3 மாத வாடகையை முன்பணமாக பெறமுடியும். புதிய சட்டத்தில் உரிமைதாரர் மற்றும் குத்தகைதாரர் இணைந்து வாடகை ஒப்பந்தத்தில் உள்ளபடி வளாகத்தை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வரையறுக்கப்பட்டுள்ளது.

இப்புதிய ‘‘தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 2017’’ புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று வெளியிட, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், அயப்பாக்கம் திட்டப் பகுதியில் 2.45 ஏக்கர் பரப்பளவில் 64 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ், தூண் தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள 336 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இந்த குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள், 637 முதல் 645 சதுர அடியுடன், இரண்டு படுக்கை அறை, கூடம், சமையலறை, படுக்கையறையுடன் இணைந்த கழிவறை மற்றும் குளியலறை, குடிநீர் மற்றும் கழிவு நீர் வசதிகள், சோலார் இணைப்பு, ஆழ்துளை கிணறு, கீழ்நிலை நீர் தேக்கத்

தொட்டி, சாலை வசதிகள், மழை நீர் வடிகால் வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூர் திட்டப் பகுதியில் 1.45 ஏக்கர் பரப்பளவில், 54 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 222 குறைந்த வருவாய் பிரிவு பன்னடுக்குமாடி குடியிருப்புகள்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் புறநகர் திட்டப் பகுதி–15ல் 4.04 ஏக்கர் பரப்பளவில், 19 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 90 வீடுகள்;

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் ஈரோடு மாநகரில் ஆட்சேபகரமான குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்காக தொலைநோக்கு திட்டம் 2023 – குடிசைப்பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின் கீழ் பவானி சாலை திட்டப்பகுதியில், ஒவ்வொரு குடியிருப்பும் 400 சதுர அடி கட்டடப் பரப்பில், தரை மற்றும் மூன்று தளங்களுடன் 35 கோடியே 47 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ள 448 அடுக்குமாடி குடியிருப்புகள்; வேலூர் மாநகர் – டோபிகானா திட்டப்பகுதியில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 18 கோடியே 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 224 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 191 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

கோயம்பேடு பேருந்து நிலையம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் தற்போது நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, தெற்கு நோக்கி செல்லும் புறநகர் பேருந்துகளுக்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் அருகிலுள்ள கிளாம்பாக்கத்தில் 44.74 ஏக்கர் நிலப்பரப்பில் 393 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள புதிய புறநகர் பேருந்து நிலையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இப்புதிய பேருந்து நிலையம், சுமார் **6,40,000** சதுர அடி கொண்ட கட்டுமானத்துடன் அமைக்கப்பட உள்ளது. இப்பேருந்து நிலையம், சுமார் **1,50,000** பயணிகள் பயன்பெறும் வகையிலும், **250** பேருந்துகள் ஒரே சமயத்தில் நிறுத்தக் கூடிய வகையிலும், **270** கார்கள் மற்றும் **3500** இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன், எரிபொருள் நிரப்பும் நிலையம், புறக்காவல் நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், துணை மின் நிலையம், தாய்ப்பாலூட்டும் அறை, முதலுதவி மையம், மருந்தகம், ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான ஓய்வறைகள், பயணிகளுக்கான காத்திருக்கும் அறை, பயணிகள் ஓய்வறை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மைச் செயலாளர் / உறுப்பினர் செயலர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம்.எஸ். சண்முகம், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆணையர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆனந்தராவ் விஷ்ணு பாட்டீல், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 22.2.2019**